TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

(Under Section 173 BNSS)

# FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
~~(Under Section 154 Cr.P.C.)~~
(குற்.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8213080

1. District : மாவட்டம் **Tenkasi** PS: காவல்நிலையம் **Vigilance and Anti-Corruption Tenkasi** Year: ஆண்டு **2024** FIR No.: மு.த.அ. எண் **11/2024** Date: நாள் **14.07.2024**

2. (i) Act சட்டம்: Sections பிரிவுகள்:

   (ii) Act சட்டம்: **PC Act 1988 as Amended in Act 16 of 2018** Sections பிரிவுகள்: **7**

   (iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் **12.07.2024 12.15 hrs** Date to : நாள் வரை

   Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை

   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் **14.07.2024** Time : நேரம் **15.30 hrs**

   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் **14.07.2024** Time : நேரம் **17.45 hrs**

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக **Written**

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்

   Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி **Municipality office, Surandai, 20 Km North East**

   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையிட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் **R.Muthu Pandian** (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் **Tr.Ramsamy**

   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு **21.04.1954** (d) Nationality : நாட்டினம் **Indian** (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

   Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்

   (f) Occupation : தொழில் **Ex. Loco Pilot** (g) Address : முகவரி **14/1-93-9 Ward, Anna Nagar, Surandai Municipality, Tenkasi District.**

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary) தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

   **1) Tr.Syed Ali, Town Planning Inspector, Surandai Municipality, Tenkasi District.**

   **2) Tr.Kaja, Private Individual, Surandai.**

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையிட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

   **No Delay**

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

**Not arise**

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு ----

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் ----

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து சமர்பிக்கிறேன். இன்று 14.07.2024 ஆம் தேதி மாலை 15.30 மணிக்கு தென்காசி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு காவல் ஆய்வாளர் C.ஜெயஸ்ரீ ஆகிய நான் நிலைய பொறுப்பில் இருக்கும்போது தென்காசி மாவட்டம், சுரண்டையை சேர்ந்த திரு.ரா.முத்துப்பாண்டியன் என்பவர் கொடுத்த புகார் மனுவை பெற்று இரகசிய விசாரணை செய்தும், புகார்தாரர் மற்றும் குற்றம் சாட்டப்பட்ட சுரண்டை நகராட்சி அலுவலகத்தில் **Town Planning Inspector** ஆக பணிபுரியும் திரு.செய்யதுஅலி மற்றும் தனிநபர் காஜா இருவர் பற்றியும் ரகசிய விசாரணை மேற்கொண்டு அவர்களின் நடத்தைகளை அறிந்தும், புகார் மனுவில் ஊழல் தடுப்பு சட்டத்தின்படி நடவடிக்கை எடுக்க முகாந்திரம் இருந்த காரணத்தினால் அந்த தகவலை சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு தென் சரக காவல் கண்காணிப்பாளர் அவர்களுக்கு தொலைபேசியின் வாயிலாக தகவல் தெரிவித்து அன்னாரின் அனுமதி பெற்று 14.07.2024 ஆம் தேதி மாலை 17.45 மணிக்கு தென்காசி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.11/2024 u/s 7 of the Prevention of Corruption Act 1988 as amended in Act 16 of 2018 என வழக்கு பதிவு செய்தேன். புகார் மனுவின் விபரம்

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..........................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ........................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14/7/24

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

14/7/24 at 19.00hr.

Name: பெயர் ...... **C.JAYASREE**
Rank: நிலை ...... **Inspector of Police, V&AC, Tenkasi.**

பின்வருமாறு: அனுப்புநர் R.முத்துப்பாண்டியன் 71/2024, த/பெ. ராமசாமி, 14/1-93-9 வார்டு, அண்ணாநகர், சுரண்டை நகராட்சி,தென்காசி மாவட்டம். பெறுநர் உயர்திரு.காவல் துணை கண்காணிப்பாளர் அவர்கள், லஞ்சஒழிப்புதுறை, தென்காசி. அய்யா, நான் சுரண்டையில் எனது குடும்பத்துடன் குடியிருந்து வருகிறேன். நான் ரயில்வேயில் பைலட்டாக வேலை பார்த்து விருப்ப ஓய்வின் பேரில் தற்சமயம் வீட்டில் இருந்து வருகிறேன். எனக்கு 4 மகன்கள் உள்ளனர். 2-வது மகன் ராகுல், பாலிடெக்னிக் படித்துவிட்டு தற்போது காற்றாலை நிறுவனத்தில் கண்காணிப்பாளராக வேலை செய்து வருகிறான். ராகுல் சுரண்டையை சேர்ந்த கருப்பையா என்பவரிடம் 2020 ஆம் ஆண்டு 6.25 செண்ட் இடத்தினை கிரையத்திற்கு வாங்கினான். அதில் 2022 ஆம் ஆண்டு ஒரு வீடு கட்டினான். தற்போது அந்த வீட்டில் தான் எனது மகன் குடியிருந்து வருகிறான். தற்சமயம் அந்த வீட்டின் பின்புறம் மற்றொரு வீடு கட்டுவதற்கான வேலைகள் நடந்து வருகிறது. எனது மகன் ராகுல் வேலை நிமித்தம் வெளியே சென்றுவிடுவதால், அந்த வீட்டின் வேலைகளை என்னை கவனிக்க சொன்னதின்பேரில் நான் தான் கவனித்து வருகிறேன். கடந்த மாதம் சுரண்டை நகராட்சியை சேர்ந்த திரு.செய்யதுஅலி மற்றொரு நபருடன் எங்கள் வீட்டிற்கு வந்து வீடு கட்டுகிறீர்களே, கட்டிட வரைபடம் அனுமதி வாங்கவிட்டீர்களா, வாங்கவில்லை என்றால் சீக்கிரம் வாங்குங்கள் என்று கூறிவிட்டு சென்றார். நான் என்ஜினியர் பரமேஸ்வரி அவர்களை பார்த்தேன். அவர் கட்டிட வரைபடம் வரைந்து, அனுமதி சம்பந்தமான ஆவணங்களை கடந்த ஜீன் மாதம் 2 ஆம் தேதியில் அவரே பதிவேற்றம் செய்தார். அந்த வரைபடம் ஜீன் மாதம் 4 ஆம் தேதியில் தள்ளுபடி செய்யப்பட்டது. பின்னர் அதனை சரிசெய்து ஜீலை மாதம் மீண்டும் விண்ணப்பித்து, 08.07.2024 ஆம் தேதியில் கட்டிட அனுமதிக்காக பணம் ரூ.54290/-ஐ ஆன்லைனில் கட்டினோம். மேற்படி கட்டிட வரைபட அனுமதி சம்பந்தமாக 12.07.2024 ஆம் தேதி பகல் சுமார் 12.00 மணியளவில் வரைபட அனுமதிக்காக செலுத்திய ரசீதுடன் சுரண்டை நகராட்சிக்கு சென்று அலுவலர் ஒருவரிடம் ரசீதை காண்பித்து விபரம் கேட்டபோது, அவர் சம்பந்தப்பட்ட அதிகாரியிடம் செல்போனில் பேசிவிட்டு, சிறிது நேரம் காத்திருங்கள் TPI திரு.செய்யது அலி வந்துவிடுவார், அவரை பாருங்கள் என்று கூறினார். நான் அலுவலகத்திற்கு வெளியில் காத்திருந்துவிட்டு சுமார் 12.15 மணியளவில் அலுவலகத்திற்குள் சென்று சம்பந்தப்பட்ட அதிகாரியான திரு.செய்யதுஅலி அவர்களை சந்தித்து எனது மகனின் கட்டிட வரைபட அனுமதி சம்பந்தமாக கேட்டபோது, கட்டிட வரைபட அனுமதி வழங்க ஏற்பாடு செய்ய வேண்டுமானால் அவருக்கு ரூ.20000/- லஞ்சமாக வேண்டும் என்று கூறினார். நான் ஏற்கனவே ஆன்லைனில் ரூ.54290 கட்டிவிட்டேன். மீண்டும் என்னால் அவ்வளவு பணம் தரஇயலாது

என்று கூறினேன். அதற்கு அந்த அதிகாரி திரு.செய்யது அலி பணம் தரவில்லை என்றால் கட்டிட அனுமதியை தள்ளுபடி செய்துவிடுவேன் என்று கூறினார். அதற்கு நான் ஏற்கனவே ரூ.54290/- கட்டியிருக்கிறேன். அந்த பணம் வீணாகிடும் என்று சொன்னேன். அதற்கு அவர் ரூ.5000/- குறைத்து ரூ.15000/- கொடுங்கள் கட்டிட அனுமதியை வாங்கி தந்துவிடுகிறேன் என்று கறாறாக கூறிவிட்டு, பணத்தை ஏற்பாடு செய்துவிட்டு, காஜா என்ற நபரிடம் கொடுத்துவிடுங்கள் என்று கூறினார். நான் காஜா யார் என்று கேட்டேன். அதற்கு செய்யதுஅலி அவர்கள் நானே வரச்சொல்கிறேன் என்று அவரது செல்போனில் தொடர்பு கொண்டு வரச்சொன்னர். செய்யது அலி அவர்கள் என்னிடம் நீங்கள் வெளியில் காத்திருங்கள் அவர் வந்து உங்களை பார்ப்பார் என்று கூறிவிட்டார். சிறிது நேரத்தில் அவர் சொன்ன காஜா என்பவர் என்னிடம் கட்டிட வரைபட அனுமதி சம்பந்தமாக பார்க்க வந்திருக்கிறீர்களா என கேட்டார். நான் ஆமாம் என்று சொன்னவுடன், சார் சொன்னதுபோல பணத்தை ஏற்பாடு செய்துவிட்டு திங்கள் கிழமை என்னை செல்போனில் தொடர்பு கொள்ளுங்கள் என்று கூறி அவரது செல்நம்பர் 9788970443-ஐ கொடுத்தார். நான் அந்த எண்ணை பதிவு செய்துவிட்டு, அலுவலகத்திற்குள் சென்று திரு.செய்யதுஅலி அவர்களை பார்த்து நீங்கள் சொன்ன காஜாவை பார்த்துவிட்டேன் என்று சொன்னேன். அவர் சொல்வதுபோல் நடந்து கொள்ளுங்கள் என்று சொன்னார். வீட்டிற்கு வந்து நான் யோசித்து பார்த்தபொழுது சட்டப்படியாக செய்ய வேண்டிய அரசு பணிக்கு அரசுக்கு செலுத்த வேண்டிய கட்டணம் போக திரு.செய்யதுஅலிக்கு கூடுதலாக அவருக்கு லஞ்சமாக ரூபாய் 15000/- கொடுக்க விருப்பம் இல்லை. என்னிடம் எனது மகன் ராகுலின் வீட்டிற்கு கட்டிட அனுமதிக்கு ரூ.15000/- லஞ்சம் கேட்ட சுரண்டை நகராட்சியை சேர்ந்த திரு.செய்யதுஅலி மற்றும் காஜா இருவர் மீதும் நடவடிக்கை எடுக்கும்படி தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன். நான் சனிக்கிழமை வேறு வேலையாக இருந்ததால் இன்று 14.07.2024 இந்த புகார் மனுவினை தங்களிடம் கொடுக்கிறேன். நாள்: 14.07.2024 இப்படிக்கு (sd R.Muthupandian)

Sir, Received the Petition on 14.07.2024 at 15.30 hrs, conducted confidential enquiry and obtained oral permission from Superintendent of Police, Southern Range, DVAC, Chennai and I registered a case in Tenkasi V&AC Cr.No.11/2024 u/s 7 of the Prevention of Corruption Act, 1988 as amended by Act 16 of 2018 on 14.07.2024 at 17.45 hrs. sd.C.JAYASREE, Inspector of Police, V&AC, Tenkasi.

இந்த வழக்கின் அசல் FIR மற்றும் அசல் புகார் மனு ஆகியவற்றை கனம் சிறப்பு நீதிபதி, ஊழல் வழக்குகளை விசாரிக்கும் சிறப்பு நீதிமன்றம் திருநெல்வேலி அவர்களுக்கும், நகலை உயரதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்தேன். ஒரு நகலை விசாரணைக்காக நான் எடுத்துக்கொண்டேன்.

